©
GOVERNMENT OF TAMIL NADU
2026

[Regd. No. TN/CCN/467/2012-14.
[R. Dis. No.197/2009.
[Price: Rs. 2.40 Paise.

தமிழ்நாடு அரசிதழ்

சிறப்பு வெளியீடு ஆணையின்படி வெளியிடப்பட்டது.

No. 376A] சென்னை, திங்கட்கிழமை, செப்டம்பர் 7, 2026
ஆவணி 21, பராபவ, திருவள்ளுவர் ஆண்டு–2057

பகுதி IV—பிரிவு 1

தமிழ்நாடு சட்டமுன்வடிவுகள்

2026–ஆம் ஆண்டு செப்டம்பர் திங்கள் 7–ஆம் நாளன்று தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையில் அறிமுகப்படுத்தப்பட்ட பின்வரும் சட்டமுன்வடிவு, நோக்க காரண விளக்கவுரையுடன் சேர்த்து, தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை விதிகளின் 130–ஆம் விதியின் கீழ் பொதுத் தகவலுக்காக வெளியிடப்படுகின்றது.

சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண். 18/2026

1951 ஆம் ஆண்டு தமிழ்நாடு சம்பளங்கள் வழங்கல் சட்டத்தினை மேலும் திருத்தம் செய்வதற்கானதொரு சட்ட முன்வடிவு.

இந்திய குடியரசின் எழுபத்தியேழாம் ஆண்டில் தமிழ்நாடு மாநில சட்டமன்றப் பேரவையினால் பின்வருமாறு சட்டமியற்றப்படுவதாகுக:–

குறுந்தலைப்பு மற்றும் தொடக்கம்.

1. (1) இந்தச் சட்டம், 2026 ஆம் ஆண்டு தமிழ்நாடு சம்பளங்கள் வழங்கல் (திருத்தச்) சட்டம் என வழங்கப்பெறும்.

(2) இது, மாநில அரசு, அறிவிக்கையின் வாயிலாகக் குறித்திடலாகும் அத்தகைய தேதியன்று நடைமுறைக்கு வருதல் வேண்டும்.

7 ஆம் பிரிவிற்கான திருத்தம்.

தமிழ்நாடு சட்டம் XX/1951.

2. 1951 ஆம் ஆண்டு தமிழ்நாடு சம்பளங்கள் வழங்கல் சட்டத்தின் (இதன் பின்பு இதில் முதன்மைச் சட்டம் எனக் குறிப்பிடப்படும்), 7 ஆம் பிரிவின் (1) ஆம் உட்பிரிவில், "மற்றும் சட்டமன்றப் பேரவையிலுள்ள அரசுத் தலைமைக் கொறடா" எனும் சொற்றொடருக்காக, "மற்றும் சட்டமன்றப் பேரவையிலுள்ள அரசுத் தலைமைக் கொறடா மற்றும் சட்டமன்றப் பேரவையின் ஏனைய ஒவ்வொரு உறுப்பினர்" எனும் சொற்றொடரானது மாற்றாக அமைக்கப்படுதல் வேண்டும்.

3. முதன்மைச் சட்டத்தின் 12 ஆம் பிரிவில்,– 12 ஆம் பிரிவிற்கான திருத்தம்.

(1) (4–E) ஆம் உட்பிரிவில், "மாதம் ஒன்றுக்கு இருபத்தைந்தாயிரம் ரூபாய்" எனும் சொற்றொடருக்காக, "மாதம் ஒன்றுக்கு எழுபத்தைந்தாயிரம் ரூபாய்" எனும் சொற்றொடரானது மாற்றாக அமைக்கப்படுதல் வேண்டும்.

(2) (4–E) ஆம் உட்பிரிவிற்கு பிறகு, பின்வரும் உட்பிரிவானது உட்புகுத்தப்படுதல் வேண்டும், அதாவது,–

"(4–F) இல் 3, 4, 6 மற்றும் 6–A ஆகிய பிரிவுகளில் குறிப்பிடப்பட்ட பதவிகளில் ஏதொன்றையும் வகித்து வராத சட்டமன்றப் பேரவை உறுப்பினர் ஒவ்வொருவரும் மாதம் ஒன்றுக்கு இருபத்தைந்தாயிரம் ரூபாய் தனி உதவியாளர் படித்தொகைப் பெறுவதற்கு உரிமையுடையவராவார்.";

(3) (5) ஆம் உட்பிரிவில், "மற்றும் (4–E) ஆம் பிரிவில் சுட்டப்பட்டுள்ள ஊர்திபடித்தொகை" எனும் சொற்றொடருக்காக, "மற்றும் (4–E) ஆம் பிரிவில் சுட்டப்பட்டுள்ள ஊர்திபடித்தொகை மற்றும் (4–F) ஆம் பிரிவில் சுட்டப்பட்டுள்ள தனி உதவியாளர் படித்தொகை" எனும் சொற்றொடரானது மாற்றாக அமைக்கப்படுதல் வேண்டும்.

4. முதன்மைச் சட்டத்தின் 13 ஆம் பிரிவில்,– 13 ஆம் பிரிவிற்கான திருத்தம்.

(1) ஓரத்தலைப்பில், "அதனை அறவு செய்தலும்" எனும் சொற்றொடருக்காக, "ஊர்திகள் மற்றும் அதனை அறவு செய்தலும்" எனும் சொற்றொடரானது மாற்றாக அமைக்கப்படுதல் வேண்டும்;

(2) (1) ஆம் உட்பிரிவில், "தமக்கு வழங்கப்படத்தக்க" எனும் சொற்றொடருக்குப் பிறகு, "மற்றும் 7 ஆம் பிரிவின் (1) ஆம் உட்பிரிவின்கீழ் தமக்கு வழங்கப்படுவதற்குரிய ஊர்திகளையும்" எனும் சொற்றொடரானது உட்புகுத்தப்படுதல் வேண்டும்.

நோக்கக் காரண விளக்கவுரை

மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள், தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையில், 19 ஆகஸ்ட் 2026 அன்று, சட்டமன்றப் பேரவை உறுப்பினர்கள் தங்கள் தொகுதிகளில் பொதுச் சேவையைத் திறம்பட ஆற்றவும், தங்கள் கடமைகளைச் செவ்வனே நிறைவேற்றவும் அதற்கு வசதியாக, ஒவ்வொரு சட்டமன்றப் பேரவை உறுப்பினருக்கும் ஒரு வாகனம் வழங்கப்படும் என்று அறிவித்துள்ளார். மேலும், ஒவ்வொரு சட்டமன்றப் பேரவை உறுப்பினருக்கும் வழங்கப்பட்டு வரும் மாதாந்திர வாகனப் படித்தொகை ரூ.25,000/– (ரூபாய் இருபத்தைந்தாயிரம் மட்டும்) என்பதிலிருந்து ரூ.75,000/– (ரூபாய் எழுபத்தைந்தாயிரம் மட்டும்) ஆக உயர்த்தப்படும் என்றும், அவர்களுக்கு மாதந்தோறும் ரூ.25,000/– (ரூபாய் இருபத்தைந்தாயிரம் மட்டும்) தனி உதவியாளர் படித்தொகை வழங்கப்படும் என்றும் அறிவித்துள்ளார்.

2. மேற்சொன்ன அறிவிப்பிற்கு செயல் வடிவம் கொடுக்கும் வகையில், அரசானது, 1951 ஆம் ஆண்டு தமிழ்நாடு சம்பளங்கள் வழங்கல் சட்டத்தை (தமிழ்நாடு சட்டம் XX/1951) தக்கவாறு திருத்தம் செய்வதென முடிவு செய்துள்ளது.

3. இந்தச் சட்டமுன்வடிவானது மேற்சொன்ன முடிவிற்கு செயல்வடிவம் கொடுக்க விழைகிறது.

ச. ஜோசப் விஜய்,
முதலமைச்சர்.

நிதி பற்றிய குறிப்பு

இந்தச் சட்டமுன்வடிவானது, சட்டமாக இயற்றப்பட்டு செயற்பாட்டிற்குக் கொண்டுவரப்படும் போது, மாநில அரசின் தொகுப்பு நிதியத்திலிருந்து செலவு செய்ய நேரிடும். முன்மொழியப்பட்ட சட்டத்தின் விளைவாக செய்ய நேரிடும் கூடுதல் செலவினமானது தோராயமாக, ஆண்டிற்கு ரூ.43,28,30,385/– (ரூபாய் நாற்பத்து மூன்று கோடியே இருபத்தெட்டு இலட்சத்து முப்பதாயிரத்து முந்நூற்று எண்பத்தைந்து மட்டும்) ஆக இருக்கும்.

ச. ஜோசப் விஜய்,
முதலமைச்சர்.

சட்டமியற்று அதிகார ஒப்படைவு பற்றிய குறிப்பு.

இந்தச் சட்டமுன்வடிவின் 1(2) மற்றும் 2 ஆம் கூறுகளானவை குறித்துரைக்கப்பட்ட நோக்கங்களுக்காக நேர்விற்கேற்ப, அறிவிக்கைகளை வெளியிடுவதற்கு அல்லது விதிகளைச் செய்வதற்கு அரசுக்கு அதிகாரமளிக்கின்றன.

2. ஒப்படைவு செய்யப்பட்ட அதிகாரங்கள் இயல்பானவையேயன்றி தனித்தன்மை வாய்ந்தவையல்ல.

ச. ஜோசப் விஜய்,
முதலமைச்சர்.

தலைமைச் செயலகம்,
சென்னை–9,
2026 செப்டம்பர் 7.

இரா. சாந்தி,
செயலாளர்.

தமிழ்நாடு அரசுக்காக சென்னை எழுதுபொருள் மற்றும் அச்சுத் துறை ஆணையரால்
அச்சிடப்பட்டு வெளியிடப்பட்டது.